# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,077 — 1960 මාර්තු 11 වැනි සිකුරාදා — 11.3.1960

12,077 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 67 | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 68 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விபபத்திர அறிவித்தல்கள் .. .. | 68 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | 71 |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நானாவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### தொழிற் பகுதி

**மேற்பார்வையாளர் தானம்—நாவிதத்தொழிற் பயிற்சி நிலையங்கள்**

தொழிற் பகுதி நடத்திவரும் நாவிதத்தொழிற் பயிற்சி நிலையங்களில் மேற்பார்வையாளராக நியமனம் பெறுதற்கு அனுபவம்பெற்ற நாவிதர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வேதனம்** : மாதமொன்றுக்குச் சகல படிகளுமுட்பட ரூ. 400 முதல் ரூ. 450 வரை சம்பளமாகும். தெரிவுபெறும் அபேட்சகரின் தராதரங்கள், அனுபவம், தகுதியுடைமை ஆகியவற்றை அனுசரித்தே சம்பளம் கொடுக்கப்படும். படிகள் எவையும் கொடுக்கப்படமாட்டா.

2. **சேவை நிபந்தனைகள்** : முதலாவதாக, இந்நியமனம் ஒன்று முதல் இரண்டு ஆண்டுவரை ஒப்பந்தத்தின்பேரில் செய்யப்படும். அதன் பின்னர், குறித்த ஒப்பந்தத்தின் சேவை நிபந்தனைகளுக்கமைய, மேலும் சில காலங்களுக்கு நீடிக்கப்படும். தெரிவு பெறும் அபேட்சகர் இத்தீவின் எப்பாகத்திற்கும் நியமிக்கப்படலாம்.

3. **தகுதிகள்** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையராயிருத்தல் வேண்டும். மேலும், தாம்—

(அ) 1960 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் தேதியன்று 40 வயதுக்குட்பட்டவரல்ல என்பதற்கும் ;

(ஆ) மிகச்சிறந்த குணமுடையவரென்பதற்கும், திடகாத்திரமானவரென்பதற்கும் ;

(இ) பயிற்சிபெறுவோருக்குப் போதித்தற்குத் தகுதியுடையவரென்பதற்கும் ;

(ஈ) குறித்த தொழிலில் குறைந்தபட்சம் 20 ஆண்டு அனுபவமுடையவரென்பதற்கும் (பெயர்பெற்ற நாவிதர் கடைகளை நடத்துவதிலும், மேற்பார்வை செய்வதிலும் அனுபவம் பெற்றவர்கள் பெரிதும் விரும்பி எடுக்கப்படுவர்).

திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.

4. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். (மூலப்பிரதிகளை அனுப்பலாகாது).

(அ) பிறப்புப் பத்திரம் ;

(ஆ) ஆக்கக்கூடுதலான கல்வித் தராதரப் பத்திரமும் அல்லது தொழிற் தராதரப்பத்திரமும் அனுபவம் பற்றிய பத்திரமும் ;

(இ) அபேட்சகரின் குணம் பற்றி சமீபத்தில் வழங்கப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள். (இப்பகுதியில் ஏற்கெனவே வேலையில் அமர்ந்துள்ள அபேட்சகர்கள் இவ்வுட்பிரிவின்கீழ் நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்பவேண்டியதில்லை).

குறிப்பு : இந்நற்சாட்சிப் பத்திரங்கள், மற்றும் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகள் அபேட்சகர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

5. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப்பத்திரத்திற் கேட்கப்பட்டவாறு எழுதப்பட்டு தொழிலதிபருக்கு 1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ந் தேதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கும் வண்ணம் "தொழில் அதிபர், தபாற் பெட்டி 575, கொழும்பு" என்ற விலாசத்திற்கு அனுப்பபடவேண்டும். விண்ணப்பங்களை இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக்கும் நேரே அனுப்பலாகாது. பத்திரங்கள் இப்பகுதியால் வழங்கப்படமாட்டா. ஆனல், அபேட்சகர்கள் மாதிரிப்பத்திரத்தைப் பார்த்தெழுதி உபயோகித்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் விண்ணப்பித்தோர் யாவருக்கும் அறிவிக்கப்படும்.

சா. ப. குமாரசிங்க,
பதில் தொழில் அதிபர்.

தொழிற் பகுதி, கொழும்பு,
1960 ம் ஆடு பங்குனி மீ 3 ந் உ.

### மேற்கூறிய பத்திரம்

**மேற்பார்வையாளர் தானம்—நாவிதத்தொழிற் பயிற்சி நிலையங்கள்**

1. முழுப் பெயர் (தெளிவாக எழுதப்படவேண்டும்) : ————.

2. விலாசம் : ————.

3. பிறந்த தேதியும் இடமும் :

(அ) அபேட்சகரினது : ————.

(ஆ) அபேட்சகரின் தந்தையினது : ————.

4. எத்தேசத்தவர் ? ————.

5. தராதரங்கள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

6. (அ) சிங்களத்தில்

(ஆ) தமிழில்

(இ) ஆங்கிலத்தில்

போதிப்பதற்குத் தகுதியுடையவரா ? ————.

7. மற்றும் தகுதிகள் : ————.
(பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

8. அனுபவம் பற்றிய முழு விபரம் : ————.

9. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்கள் : ————.
(நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

10. மற்றும் விபரம் யாதாயினும் : ————.

————,
அபேட்சகரின் ஒப்பம்.

தேதி : ————.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசினர் கலைக் கல்லூரி

**1960 ம் ஆண்டு ஆனி 21 ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் 1960/61 நிர்வாக ஆண்டுக்குரிய பிரவேசம்**

வரைதலும் வர்ணம் தீட்டலும், சிற்பம் சித்திரக்கைப்பணி, வடஇந்திய சங்கீதம், கண்டிய நடனம் ஆகியவைகளில் பயிலுவதற்கு உரிய விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு பங்குனி 31 ம் திகதி வரையும், ஏற்றுக்கொள்ளப்படும்.

கல்லூரி விபரங்களில் குறிக்கப்பட்டுள்ளபடி விண்ணப்பங்கள் கவனமாக நிரப்பப்பட வேண்டும். விபர அறிக்கையும் விண்ணப்பபத்திரங்களும் அரசினர் கலைக் கல்லூரி காரியாலயத்திலிருந்து 25.3.1960 க்கு முன் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஒன்றிற்கு மேற்பட்ட வகுப்புகளில் சேர விரும்புவோர் வெவ்வேறு விண்ணப்பப் பத்திரங்கள் நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. எல். பி. டி. மெல்,
பதில் அதிபதி,
அரசினர் கலைக் கல்லூரி.

46, ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 7,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 2 ந் உ.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

பண்டாரவளையிலுள்ள நீர்ப்பாசன பெரும்பாக இஞ்சினியர், மொனருகலை உப பகுதியிலுள்ள காத்தாம்பை அணைக்கட்டு வேலைக்குரிய தெண்டர்களை 1960 ம் ஆண்டு எப்ரல் மாதம் 6 ம் திக்தி காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்வார்.

தெண்டர்கள், மொனருகலை உப கந்தோரில் கிடைக்கும் பத்திரங்களில் சீல் செய்து, இருபிரதிகளில் மனுச் செய்ய வேண்டும். அக் கந்தோரில் இதைப்பற்றிய வேறு விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கொந்தராத்துக்காரர்கள், நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 17,000 அல்லது மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்க வேண்டும். மொனருகலை உபகந்தோரில் அல்லது வேறு கச்சேரியிலேனும் ரூபா 25 கட்டிப் பெற்ற ரசீதோடும், கையிருப்பு வேலைகளைப் பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடும் மனுச் செய்ய வேண்டும். பத்திரங்கள் 5.4.60 வரை வழங்கப்படும்.

ஓ. எஸ். சந்திரரத்தின,
உப கந்தோர், மொனருகலை.

---

## நீர்ப்பாய்ச்சல் பகுதி

பின்வரும் சேவைகட்கு வடமேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாய்ச்சல் எஞ்சினியர் குருணாகலையில் 1960 ம் ஆண்டு பங்குனி மாசம் 23 ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி வரை தனிப்பட்ட கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வார்.

| சேவையின் விபரம் | பதிவு செய்யப் பட்ட தொகை ரூ. ச. | கேள்விகட்டுப் பணம் ரூ. ச. |
|---|---|---|
| 1. ராஜாங்கணைத் திட்டத்தில் நிரந்தரமான தங்கு வீடு அமைத்தல் .. | 50,000 00 | 50 00 |
| 2. பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு குறை நிரந்தர வீடு அமைத்தல் .. | 12,500 00 | 25 00 |
| 3. பொலிஸ் சாஜன்கட்கு இரு குறை நிரந்தர வீடுகள் அமைத்தல் .. | 15,000 00 | 25 00 |
| 4. பொலிஸ் காவலர்கட்கு ஆறு குறை நிரந்தர வீடுகள் அமைத்தல் .. | 45,000 00 | 25 00 |
| 5. உஸ்கலைசியம்பலாங்கமுவ குளக்கட்டுக்கு பாதுகாக்கும் கல்பரப்புதல் . | 25,000 00 | 25 00 |

2. நீர்ப்பாசன பகுதியில் ஒவ்வொரு சேவைக்கும் நேராகவுள்ள தொகைகட்கோ அல்லது அவைகட்குக் கூடவோ பதிவு செய்யப்பட்ட பொருத்தனைக்காரர் மட்டுமே கேள்வி கேட்பதற்கு தகுதியுள்ளவர்களாவர்.

3. ராஜாங்கணைத் திட்டத்தின் நீர்ப்பசான எஞ்சினியரிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் கேள்விப்பத்திரங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து வேறு விபரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு பங்குனி மாசம் 16 ந் திகதியிலிருந்து 22 ந் திகதிவரை காரியாலய நேரத்திற்குள் கொடுக்கப்படும்.

ஒப்பம் : ரி. ஆர். த சில்வா,
நீர்ப்பாசன எஞ்சினியர்,
ராஜாங்கணைத் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
கல்கமுவா,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 3 ந் உ.

---

## நீர்ப்பாசனக் கந்தோர்

வட பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 5.4.60 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரையும் ஓர் பங்களா அகத்தியில் கட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் யாவும் வடபகுதி நீர்ப்பாசன இஞ்சினியர்—மன்னார் மாவட்டம் முருங்கனில் பெற்றுக் கொள்ளலாம். இதற்குரிய பதிவுப் படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் 4.4.60 மாலை 4.30 மணி வரைக்கும் விநியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 17,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செயயப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் வேண்டப்படும். விண்ணப்பபத்திரத்துக்குரிய தொகை ரூபா 25.00. இத்தொகையை கச்சேரியில் அல்லது இறிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு, மன்னார் மாவட்ட இறிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டீ. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னார் மாவட்டம்.

முருங்கன்,
2.3.60.

---

## நீர்ப்பாசனக் கந்தோர்

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 5.4.60 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரையும் நான்கு-இரணைக் குடிசை (4 Nos. Twin Labour Cottage) கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் யாவும் வடபகுதி நீர்ப்பாக இஞ்சினியர்-மன்னார் மாவட்டம், முருங்கனில் பெற்றுக் கொள்ளலாம். இதற்குரிய பதிவுப் படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் 4.4.60 மாலை 4.30 மணி வரைக்கும் வினியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 12,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் வேண்டப்படும். விண்ணப்பப்பத்திரத்துக்குரிய தொகை ரூபா 25. இத்தொகையை கச்சேரியில் அல்லது இறிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப்பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு-மன்னார் மாவட்ட இறிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னார் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 2 ந் உ.

---

## நீர்ப்பாசனக் கந்தோர்

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 5.4.60 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரையும் கூறுய் குளத்துக்குப் போகும் பாதைக்குக் கிறவல் போடுவதற்கு (Gravel) கேள்விப் பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் யாவும் வட பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் மன்னார் மாவட்டம் முருங்கனில் பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய பதிவுப் படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் 4.4.60 மாலை 4.30 மணி வரைக்கும் வினியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 30,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் வேண்டப்படும். விண்ணப்பப் பத்திரத்துக்குரிய தொகை ரூபா 50. இத்தொகையை கச்சேரியில் அல்லது இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு-மன்னர் மாவட்ட இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

முருங்கன்,
1960 ஆண்டு மார்ச்சு மீ 2 ந் உ.

---

## நீர்ப்பாசனக் கந்தோர்

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 5.4.60 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரையும் இரண்டு மூடு கதவு (Tower Sluice) கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் யாவும் வடபகுதி நீர்ப்பாசன இஞ்சினியர்-மன்னர் மாவட்டம், முருங்கனில் பெற்றுக் கொள்ளலாம். இதற்குரிய பதிவுப் படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் 4.4.60 மாலை 4.30 மணி வரைக்கும் வினியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் வேண்டப்படும். விண்ணப்பப்பத்திரத்துக்குரிய தொகை ரூபா 50. இத் தொகையை கச்சேரியில் அல்லது இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு-மன்னர் மாவட்ட இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 2 ந் உ.

---

## கோரிக்கை விளம்பரம்

### உணவுப் பகுதிப் போசனசாலை

உணவுப்பகுதி உத்தியோகத்தருக்கும் அங்கு வேலை செய்வோருக்கும் 1960 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதிக்கும், 1961 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ந் திகதிக்குமுள்ளான காலத்தில் போசனம், சிற்றுண்டி முதலியன வழங்குதற்கான கோரிக்கைகள் முத்திரை மெழுகிடப்பட்ட காகித உறையின் இடது மேற் பாகத்தில் " உணவுப்பகுதி போசனசாலைக்கான கோரிக்கைகள் " என எழுதப்பட்டு 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30 ந் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கோரிக்கைகள் உணவுப் பகுதியிலிருந்து பெறக்கூடிய பத்திரங்களில் செய்யப்பட்டு ஒரு உறையில் இடப்பட்டு மெழுகு முத்திரையிடப்பட்டு, உணவு அதிகாரி 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என விலாசமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கோரிக்கைப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களுக்கேற்ப எல்லா வகை உணவுகள், சிற்றுண்டிகள் ஆகியவையின் விலை விபரங்களைக் கோரிக்கைக்காரர் குறிப்பிட வேண்டும்.

4. சித்தியடையும் கோரிக்கைக்காரர், கோரிக்கை ஏற்கப்பட்ட திகதியிலிருந்து 3 நாட்களுக்குள் தங்குபணமாக ரூ. 500 உணவு அதிகாரியின் காரியாலயத்தில் செலுத்த வேண்டும். இத்தொகை திருப்திகரமாக ஒப்பந்தம் செய்வதன் பேரில் பிணையாக வைத்திருக்கப்படும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் சித்தியடைந்த கோரிக்கைக்காரர் திருப்திகரமாக ஒப்பந்தத்தை நிவிர்த்தி செய்யத் தவறின் நஷ்ட ஈடு செலுத்த நேரிடும். உணவு அதிகாரியின் திருப்திக்கு ஒப்பந்தம் நிவிர்த்திசெய்யப்பட்டிருப்பின், தங்குபணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. சமைப்பதற்கு வசதிகள் எதுவும் இல்லை. ஆனால் போசனசாலைப் பகுதியைத் தவிர வேறொரு அறையும் ஒதுக்கப்படும். இவ்வறையில் சமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

6. சித்தியடைந்த கோரிக்கைக்காரர், போசனசாலைக் கட்டிடத்திற்கும், அவரது பாவனைக்காக ஒதுக்கப்படும் அறைக்குமாக மாதாந்தம் 60.00 ரூபா வாடகை கொடுக்கவேண்டும். சாப்பாட்டு விடுதி நடத்துவதற்கு நகரசபைக்குக் கொடுக்க வேண்டிய உத்தரவுச்சீட்டு (லைசென்ஸ்) பணத்தையும் செலுத்த வேண்டும்.

7. எவ்வொன்றையோ அல்லது எல்லாக் கோரிக்கைகளையுமோ நிராகரிக்கும் உரிமை உணவு அதிகாரிக்கு உண்டு.

8. கோரிக்கை ஏற்கப்பட்டதும் தங்குபணம் செலுத்தி ஒப்பந்தக்காரர் உணவு அதிகாரியுடன் ஒப்பந்தம் எழுதிக்கொள்ளலாம்.

9. ஒப்பந்தப் பத்திரத்திற்குத் தேவையான முத்திரைச்செலவை ஒப்பந்தக்காரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கே. எம். டீ. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

கொழும்பு,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5 ந் உ.

---

## வித்தியா பகுதி

### இடைநிலை வகுப்புகளையுடைய தமிழ்ப் பாடசாலைகளுக்கு நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் 1959/60

தமிழ்ப் பாடசாலைகளுக்கு நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதி கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் உ.

---

## வித்தியா பகுதி

### இடைநிலை வகுப்புகளையுடைய தமிழ்ப் பாடசாலைகளுக்கு நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் 1959/60

முஸ்லிம் பாடசாலைகளுக்கு நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் உ.

## வித்தியா பகுதி

### அரசினர் சிங்கள பாடசாலைகளுக்கு நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள், 1959/60

அரசினர் சிங்கள பாடசாலைகளுக்கு நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பி லுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங் குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் உ.

---

## வித்தியா பகுதி

### மத்திய மாவித்தியாலயங்களுக்கும், மாவித்தியாலயங்களுக்கும் நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள், 1959/60

மத்திய மாவித்தியாலயங்களுக்கும், மாவித்தியாலயங்களுக்கும் நூனிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ந் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி; விநியோகக் கிளை, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ள வர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங் குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் திகதி.

---

## வித்தியா பகுதி

### பாடசாலைகளுக்கு சிங்கள சிறந்த இலக்கியங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்—1959/60 (உப தொகுதி)

19.2.60 ந் திகதிய அரசினர் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாய அறிவித்தல் சம்பந்தமாய் மேலும் அறிவிப்பது.

2. மேற்குறித்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 25.3.60 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் குறித்த திகதியன்று மு.ப. 10.30 மணிவரை கல்வி மந்திரி காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ள வர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரில் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியே உள்ளவர்கள் ஆங்காங் குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 24 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டீ. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ந் திகதி.

---

## தேர்தல் இலாகா

### சீ. வை. 7908 இலக்க ஒஸ்ரின் ஸ்ரேஷன் வெகனை வாங்குவதற்கான கேள்விப் பத்திரம்

1. 1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ம் தேதி காலை 9.30 மணி வரை சீ. வை. 7908 ம் பதிவு இலக்கத்தைக் கொண்ட ஒஸ்ரின் ஸ்ரேஷன் வெகனை வாங்குவதற்கு கேள்விப் பத்திரம் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி வெகன் தேர்தல் அதி காரியின் கந்தோரில் கந்தோர் நேரத்தில் பரிசீலனைக்குக் கிடைக்கும்.

2. கேள்விப்பத்திரம் சீல் வைத்த உறையிலடைத்து " சீ. வை. 7908 ம் இலக்க ஒஸ்ரின் ஸ்ரேஷன் வெகனை வாங்குவதற்கான கேள்விப் பத்திரம் " என உறையின் இடதுபுற மேல் மூலையில் எழுதி, தேர்தல் அதிகாரி, 31 கில்பட் கிரஸன்ட், கொழும்பு 7 என்று விலாசமிட்டு அனுப்பவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேர் முகமாகவோ இவ்விலாகாவின் அலுவலக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் மேலேயுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரம், தேதிகளுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள், கேள்விதாரரின் சொந்தப் பத்திரத்தில் இரு பிரதிகளாக சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளிலுள்ள மாற்றங் கள், அழித்தல்களுக்கு கேள்விதாரரின் கையொப்பத்தால் உறுதிப் படுத்தல் வேண்டும். கீழ்வரும் பந்தியில் கூறப்பட்டுள்ளபடி, கேள்விப் பத்திரத்திற்குரிய கட்டுப் பணத்தின் பற்றுச்சீட்டை, கேள்விப்பத்திரத் தோடு இணைத்தல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரத்திற்குரிய கட்டுப் பணமாக 25 ரூபாவை காசாக தேர்தல் அதிகாரியின் கந்தோரில் இறுத்துக்கொள்ள வேண் டும். இக் கட்டுப்பணத்தின் பற்றுச் சீட்டை கேள்விப் பத்திரத்தோடு இணைத்தல் வேண்டும்.

6. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள், கேள்விதாரரால் மீண் டும் வாபஸ் பெற முடியாது.

7. ஒரு கேள்விப் பத்திரத்தையோ, அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங் களையோ நிராகரிக்கும் சக்தி அரசாங்கத்திற்கு உரிமையானது. மேற் குறிப்பிட்டுள்ள எல்லா விதிகளையும் சரிவரக் கையாளாத எந்தக் கேள்விப் பத்திரமும் பார்வையிடப்படமாட்டாது.

8. எல்லாக் கேள்விப் பத்திரங்களும் 1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ம் தேதி காலை 9.35 மணிக்கு தேர்தல் அதிகாரியின் கந்தோர், 31, கில்பட் கிரசண்ட், கொழும்பு 7 என்ற இடத்தில் திறக்கப் படும். எல்லர் கேள்விதாரரும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

9. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர், கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் கேள்விப் பத்திரத்திலுள்ள முழுத் தொகையையும் காசாகக் கட்ட ஆயத்தமாயிருத்தல் வேண்டும். அங்ஙனம் அவர் காசு கட்டத்தவறி னால், அவர் தன் கேள்விப் பத்திரத்தின் உரிமையை இழப்பதுடன், கேள்விப் பத்திரத்தின் கட்டுப்பணத்தையும் அரசாங்கத்திற்கு இழந்தவ ராவர். காசு கட்டியவுடன் வாகனத்தை அப்புறப்படுத்தல் வேண்டும்.

10. மேலதிகமான தகவல்கள் வேண்டுமாயின், கீழ் கையொப்ப மிட்டுள்ளவரின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.

31, கில்பட் கிரசண்ட்,
கொழும்பு, 7,
1960 ம் ௵ மார்ச்சு ௴ 11 ந் உ.

---

## அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகம்

### விற்பனவுக்காய கோரிக்கை விண்ணப்பங்கள்

மேலதிகமானதும், உபயோகிக்கப்படாததுமான நீர் விளையாட்டு சாதனங் களை வேண்டுதல் அக்கறுதற்கான கோரிக்கை விண்ணப்பங்கள் அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலக அதிபர் அவர்களால் 1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ந் தேதி காலை 9.30 மணியளவும் வரவழைக்கப் படும்.

4 ஐக்குவமோபைல் ஸ்கூட்டேஸ்
8 பற்றறிஸ், 12 வோல்ற் மேற்கூறப்பட்ட ஸ்கூட்டேஸ்களுக்கு
4 சோடி மெய்ஸ்ரஷாவ்ற் வாட்டஸ்கிஸ்
4 டொல்பைன் வாட்டஸ்கிஸ்
2 ஐக்குவபிளேன்ஸ்
8 ஸ்கிங் கயிறுகள்
2 லெங்க்ஸ் கோளீன் ரேப் ஐக்குவபிளேன்ஸ் உடையது.
2 ரோஸ் 16′ சலோ ட்ரேற் ப்ஓற்ஸ்
1 பென்ரு அஉற் போட் மோட்டார் 5 h. p.

ஈற்றில் உள்ள இரண்டு பொருட்களைத் தவிர்ந்த ஏனைய பொருட்கள் எல்லாவற்றையும் கொழும்பு கொம்மிஸ் ஏறியற் வீதியில் உள்ள உல்லாசப் பிரயாணிகள் அலுவலக அதிபரின் காரியாலயத்தில் எந்த வேலை நாட்களிலாவது கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம். இரு ஸ்கூட்டேஸ் சிறிது பழுதடைந்திருப்பதால் திருத்தம் தேவை. இழுவைப் படகு, பென்று மோட்டார் முதலியன கிக்கடுவா வாடி வீட்டில் பார்வையிடலாம். இதற்காய கோரிக்கை விண்ணப்பங்கள் இரட்டைப்பிரதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்பத்திரத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு விண்ணப்பக்காரரும், கச்சேரியில் அல்லது திறைச்சேரியில் 100 ரூபா கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை, அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தால் பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ந் தேதி நண்பகல் 12 மணியளவும் வழங்கப்படும்.

கோரிக்கை விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் தேதி காலை 9.30 மணியளவில் அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகத்தில் திறந்து வைக்கப்படும். ஏனைய விபரங்களை, உல்லாசப் பிரயாணிகள் அலுவலக அதிபருக்கு மனுப்பண்ணி அறியவும்.

டி. அலுவிகார,
அதிபர்,
அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகம்.

அர. உல். பிர. அலுவலகம்.
1960 ம் ஆு மார்ச்சு மீ 5 ந் உ.

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திர சபைத் தலைவர், பண்டாரவளை எற்றம்பிட்டி வீதியிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை, புதிய நிலையத்தில், வெட்டவும் மட்டப்படுத்தவும், குறிக்கப்பட்ட மட்டத்துக்கு நிலையத்தை தரப்படுத்தவும், வீதிவழிகள் அமைக்கவும், கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விப்பத்திரங்கள், 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30 ம் திகதி, புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முடிவடையும்.

நில வேலைக்குரிய யந்திர சாதனங்களையுடையவரும் ரூ. 25,000மும் அதற்கு மேற்பட்ட தொகைக்குமான வேலைகளை திருப்திகரமாக செய்து முடித்த அங்கீகரிக்கப்பட்ட கொந்தராத்துக்காரர்களுமே, கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க தகவுடையவர்.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமுன்பு கேள்விப்பத்திரகாரர் தங்களுடைய சான்றோலைகளை பொரலஸ்கமுவ, வெரஹெரை இலங்கை போக்குவர்த்துச் சபை சிவில் என்ஜினியரால் சரிபார்த்து, கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டுப்பணமாக ரூ. 100 ஐக் கட்டவேண்டும்.

இலங்கை போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்ட பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவை 1960ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை வெரஹெரையிலுள்ள சிவில் என்ஜினியரால் வழங்கப்படும். மேலதிக எல்லா விபரங்களும் அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

கொழும்பு,
4.3.60.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### உதகனுவ பாதையில் கல்வேட் 8′ × 4′ கட்டுதல்

மொனிருகல டிஸ்திறிக் அதிபர் பதியப்பட்ட கொன்றுக்றர்களிடம் இருந்து கல்வேட் 8′ × 4′, உதகனுவ கொலன பாதையில் கட்டுதற்கு கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை 1.4.60 காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் மொனருகல அதிபர் இடம் பதியப்பட்ட கொரன்றுக்றர்களுக்கு ரூ. 25 கொழும்பு திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டு சமர்ப்பிப்போருக்கு கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை 25.3.60, 3 மணிவரையில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் சீல் வைத்த என்வலப்பில் வேலையின் பெயர் இடது பக்கத்து மேல் மூலையில் எழுதவேண்டும். கேட்கப்பட்ட தொகையில் 10% பிணைப்பணம் எக்கிறிமென்ற் எழுதமுன் கட்ட வேண்டும். அதிபர் எந்த கேள்விப் பத்திரத்தையும் நியாம் கட்டாது ஏற்காது விட முடியும். வேறு விபரங்களும் மொனருகல அதிபர் இடம் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பீ. சில்வா,
அதிபருக்காக, மொனருகல.

கச்சேரி,
4.3.60.

---

# பொருட்கள் ஏல விற்பனை

## ஏல விற்பனை

1960 ம் ஆு பங்குனி மீ 21 ந் உ (21. 3. 60) காலை 9.30 மணிக்கு கோல் பக் வீதியிலிருக்கும் இலங்கை அரச கடற்படை விடுதியில் ஒரு 3 தொன் "போட்சன்" மோட்டார் வான் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். வேலை நாட்களில் மேற்கூறிய விலாசத்தில் "வானைப்" பார்வையிடலாம். ஏலத்தில் "வானை" வேண்டுபவர் அதன் முழுக் கிரயத்தையும் உடனே கொடுக்கவேண்டும்.

ச்யி. ஆர். எம். டீ மெல்,
"றியர் அட்மிரல்"
இலங்கை அரச கடற்படைத் தளபதி.

தலைமைக் காரியாலயம்,
இலங்கை அரச கடற்படை,
593 ம் இல. தபாற் பெட்டி,
கொழும்பு.

---

## விளம்பரம்

1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 1 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 26 ந் திகதி சனிக்கிழமை பி. ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆு பங்குனி (மார்ச்) மீ 1 ந் உ

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.